23rd October 1971]

APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 20 on page 107]

(அ) ஆம்.

(இ) 1970–71-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் பணி கீழ்க்கண்ட பத்து (10) தனியார் விமான நிறுவனங்களுக்கு ஒப்ப அறிவிப்பின்படி (tenders) அனுமதி அளிக்கப்பட்டுள்ளது :—

	லட்சம் ஏக்கர்.
1. மெஸர்ஸ் கம்பட்டா ஏவியேஷன் (பி) லிமிடெட் 42, க்வீன்ஸ் ரோடு, பாம்பே	1.50
2. மெஸர்ஸ் ஹெலிகாப்டர் செர்விஸஸ் (பி) லிமிடெட் டி 21, 22, காமர்ஸ் சென்டர், பாம்பே-34	2.00
3. மெஸர்ஸ் அக்ரிகல்ச்சுரல் ஏவியேஷன் (பி) லிமிடெட் ஜுஹு ஏர்போர்ட், பம்பே	1.15
4. மெஸர்ஸ் அவிந்தியா (பி) லிமிடெட், லைப்ரரி பில்டிங்ஸ், நியூ மரீன் லைன்ஸ். பாம்பே	0.50
5. மெஸர்ஸ் சங்கி ஏவியேஷன். 7 ஈ ஜண்டவாலன் நியூ டெல்லி-55	1.15
6. எச். எஸ். சோபா சிங் (பி) லிமிடெட், 82, விர் நாரிமின் ரோடு, பாம்பே	0.40
7. மெஸர்ஸ் கேம்கா ஏவியேஷன் (பி) லிமிடெட், இண்டியன் சேம்பர் பில்டிங்ஸ், எஸ்பிளனேட், சென்னை-1	0.10
8. மெஸர்ஸ் மஹேந்திரா அண்ட் மஹேந்திரா, கேட்வே பில்டிங்ஸ், அப்போலோ பந்தர், பாம்பே	1.10
9. மெஸர்ஸ் மனக்ஸி ஏவியேஷன் (பி) லிமிடெட், அப்போலோ ஸ்டீரிட், பாம்பே	1.10
10. மெஸர்ஸ் புஷ்பகா ஏவியேஷன் (பி) லிமிடெட், மீனம்பாக்கம் ஏர்போர்ட், சென்னை	0.86

APPENDIX V.

[*Vide* Answer to Starred Question No. 23 on Page 113]

(அ) தமிழ் நாடு மின்சார வாரியத்தில் பணி புரியும் பொறியாளர்கள் 20–5–70 அன்று திடீரென்று வேலை நிறுத்தம் செய்ததன் விளைவாக எவ்வித விரயமும் தமிழ் நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படவில்லை.

[23rd October 1971

(இ) முன்னறிவிப்பு இல்லாமல் சென்ற மே மாதம் 20-ம் தேதி வேலை நிறுத்தம் செய்த பொறியாளர்களையும் இதர ஊழியர்களையும் மற்றும் 21–5–70 அன்று ஒருமித்த ஈட்டு விடுப்பு எடுத்து போராட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து ஊழியர்களையும் தற்காலிக வேலை நிறுத்தத்தில் வைக்கப்பட்டது. அவர்களில் கைது செய்யப்பட்ட ஊழியர்களைத் தவிர மன்னிப்புக் கோரி தாம் வாரியத்திடம் உண்மை ஊழியராக இருப்போம் என எழுதிக் கொடுத்த ஏனைய ஊழியர்களை அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்குக் குந்தகம் இல்லாமல் திரும்பவும் வேலையில் சேர அனுமதிக்கப்பட்டது. மேற்கண்ட வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அனைத்து ஊழியர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது.

மின்சார வாரியம் மறு பரிசீலனை செய்த பின்னர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோர் மன்னிப்புக் கோரி, உண்மை ஊழியர்களாய் இருப்போம் என உறுதி கொடுத்தமையால், தொழிலாளர்களுடன் நல்லுறவு நிலைக்க வேண்டும் என்ற நல்லதொரு எண்ணத்தினால் மின்சார வாரிம் இரக்க மனப்பான்மையுடன் அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை விட்டு விடத் தீர்மானித்தது. வேலைக்கு வராத நாட்களை ஈட்டிய விடுப்பாகவும் ஈட்டிய விடுப்பு இல்லாதவர்களுக்கு விதிகளின்படி எந்த விடுப்பிற்கு அவர்கள் உரியவர்களோ அந்த விடுப்பு கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் 23—7—70 அன்று கைது செய்யப்பட்டவர்கள் மீது காவலர் தொடுத்துள்ள வழக்குகளைத் திரும்ப பெறுவதற்கு அரசு கட்டளை பிறப்பித்தது. இதைக் கருத்தில் கொண்டு, காவலரால் கைது செய்யப்பட்ட பொறியாளர் ஒன்பது பேரும் அவர்கள் மீது எடுக்கப்படும் எந்த ஒழுங்கு நடவடிக்கைக்கும் பாதகமின்றி திரும்பவும் வேலையில் சேர அனுமதிக்கப்பட்டனர்.

திடீர் வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்ட பொறியாளர்கள் ஒன்பது பேர் மீது தமிழ் நாடு மின்சார வாரியத்தினால் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது. இந்த ஒன்பது பேர்களில் பொறியாளர் திரு. பி. நாராயணன் வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ளவில்லையென்றும் அவர் துணை நிலையத்தில் தனது பணியைக் கவனித்துக் கொண்டிருந்தார் என்றும் புலனாய்வின் போது தெரியவந்ததால் இவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது கைவிடப்பட்டுள்ளது. எஞ்சிய எட்டுப் பொறியாளர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவர்கள் ஒவ்வொருவர் நேர்விலும் இறுதி ஆணைகள் பிறப்பிப்பதற்கு இன்னும் சிறிது காலமாகும்.